# காலிங்கராயன் தின விழா விவசாயிகள் வழிபாடு

கொடுமுடி, ஜன. 20-

காலிங்கராயன் தினவிழாவை ஒட்டி, பாசன விவசாயிகள் பொங்கல் வைத்து வழிபாடு நடத்தினர். 750, ஆண்டுகள் பழமை வாய்ந்த காளிங்கராயன் வாய்க்கால் வெட்டும் பணி, 1271ம் ஆண்டு, பவானியில் தொடங்கி, 1282ல், கொடுமுடி அருகே, ஆவுடையார்பாறையில், 90 கி.மீ., துாரத்துக்கு வெட்டி முடிக்கப்பட்டது. இந்த வாய்க்காலை, விவசாயிகளுக்கு அர்ப்பணித்த காலிங்கராயனுக்கு, நன்றி செலுத்தும் வகையில், ஆண்டுதோறும் தை மாதம் 5ம் தேதி, பாசனத்துக்கு உட்பட்ட விவசாயிகள் பொங்கல் வைத்து கொண்டாடி வருகின்றனர்.

இதையொட்டி, தை 5ம் நாளான நேற்று, காளிங்கராயனுக்கு பொங்கல் வைத்து பாசன விவசாயிகள் வழிபாடு நடத்தினர். இதில், காளிங்கராயனின் வாரிசுதாரர்களாகிய அருண் காளிங்கராயன், சித்தார்த் காளிங்கராயன், கலந்து கொண்டனர். நேற்று, 50க்கும் மேற்பட்ட பகுதிகளில், அந்தந்த பாசனப்பகுதிகளை சார்ந்த விவசாயிகள் பொங்கல் வைத்தும், காலிங்கராயன் வாய்க்காலில் முளைப்பாறி விட்டும், வழிபாடு செய்தனர்.

★ பவானி, காளிங்கராயன்பாளையத்தில் உள்ள, காலிங்கராயன் மணி மண்டபத்தில், அவரது உருவசிலைக்கு, பல்வேறு கட்சியினர், அமைப் புகள் மற்றும் விவசாயிகள், மலர் துாவி மரியாதை செலுத்தினர்.